பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 15 புதன்கிழமை (03.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 307

# வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசு அவசரத் திட்டம்

## நாடாளுமன்றுக்கு விசேட சட்டமூலம் விரைவில்

கொழும்பு,ஒக்டோபர் 03

**வடக்கிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் நோக்கோடு அரசு அவசரத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**இதற்கு வகை செய்யும் சட்டமூலம் ஒன்றின் நகல் வடிவம் இன்று அமைச்சரவையின் பரிசீலனைக்கு வருகின்றது. விரைவில் அது நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகின்றது.**

வடக்கில் கடந்த முறை தேர்தல்கள் நடைபெறாத 32 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்தும்பொருட்டு மீண்டும் வேட்பு மனுக்களைக் கோருவதற்கான விசேட சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக விசேட ஏற்பாடுகள் நகல் சட்டமூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனால் இன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வட மாகாணத்தின் 33 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்காக இதற்கு முன்னரும் வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தபோதிலும் பின்னர் அந்தத் தேர்தல் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு, இறுதியாக விசேட சட்டத் திருத்தம் மூலம், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் சட்டரீதியாக நிராகரிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியிலேயே இப்போது

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 03

நீதித்துறையின் ஊடாக அரசு தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று குற்றம் சுமத்தி இன்று தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

70இற்கும் மேற்பட்ட பலதரப்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் அவற்றின் ஒன்றியங்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை இன்று நண்பகல் 12 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்துகின்றன.

அனைத்து தொழிற்சங்க ஊழியர்களையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மாலு சந்தியில் நேற்றுமாலை கிரனேட் தாக்குதல்

உடுப்பிட்டி, ஒக்.3

நெல்லியடி, மாலு சந்தியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று மாலை 6.40 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலை அடுத்து படையினர் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

சேதவிவரம் நேற்றிரவு வரை தெரியவரவில்லை. (அ-1-78-155-226)

## பருத்தித்துறைப் பிரதேசத்தில் இப்போது நிம்மதியான வாழ்வு குலைந்து போயுள்ளது

### மக்களின் நலனுக்கு நீதிமன்றம் உதவும் என்கிறார் நீதிபதி

பருத்தித்துறை, ஒக்.3

பருத்தித்துறை நீதி நிர்வாகப்பிரிவில் கடந்த ஆறு மாத காலமாக மக்களின் நிம்மதியான வாழ்வு குலைந்து போயிருக்கிறது. மக்களின் சொத்துக்கள் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மக்களின் நலனில் அக்கறை கொண்டு இந்த நிலைமையைப்போக்க நீதி மன்றம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். கொள்ளைச் சம்பவங்கள் ஒன்று தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு கடந்த ஆறு மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுப்பிரமணியம் மதியரசன் என்பவரை பிணையில் விடுமாறு கோரி தாக்கல் செய்ய பட்ட மனு மீதான விசாரணையின் போதே நீதிபதி இப்படிக்கூறினார்.

மனுவை ஆராய்ந்த நீதிபதி பிணை வழங்க மறுத்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

ஆறு மாத காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு, பிணைகள் சட்டத்தின் ஏற்பாட்டில் 5ஆம் பிரிவின்கீழ் பிணை வழங்குவதற்கு நீதிவானுக்கு தற்துணிவும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளன.

#### களநிலவரம் மிக மோசம்

மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் குற்றம், அதன் தாற்பரியம், பொது மக்கள் பாதிப்பு, பின் விளைவுகள், தற்போதய களநிலவரம் ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியம்.

பயங்கர ஆயுதங்கள் கொண்டு தாக்கு

(09ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவிலும் இரணைமடுவிலும் கிபிர் விமானங்கள் குண்டு மழை!

முல்லைத்தீவு, ஒக்.03

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடுவில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் விமானப்படையினரின் "கிபிர்" மற்றும் "மிக்-27" ரக விமானங்கள் நான்கு தடவைகள் குண்டுதாக்குதல்களை மேற்கொண்டன.

வன்னி வான்பரப்பில் காலை 6 மணியளவில் வேவு விமானம் வட்டமிட்டுக் கொண்டு இருக்க இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

மக்கள் குடியிருப்புகள் மீது நடாத்தப்பட்ட இந்தத்தாக்குதலில் வீடு ஒன்று முற்றாக அழிந்ததுடன் 6 வீடுகளும், 6 ஏக்கர் வாழைத்தோட்டமும் முற்றாக சேதமடைந்தன. குண்டுத்தாக்குதல் அதிர்வினால் விசுவமடு மகாவித்தியாலயத்தின் சில கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலில் ராமலிங்கம் சுதா (30) என்ற இளைஞர் காயமடைந்தார்.

இதேவேளை, கிளிநொச்சிக்கு சமீபமாக இரணைமடுப் பகுதியிலும் நேற்று முற்பகல் 'கிபிர்' விமானங்கள் குண்டு மழை பொழிந்தன என்றும் இதில் குடியிருப்பு கள் பலவும் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும், விடுதலைப்புலிகளின் தளங்கள் மீதே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று விமானப்படையினர் தெரிவித்தனர். (அ-5)

## திருமலையில் வர்த்தகர் கடத்தப்பட்டார்

கொழும்பு, ஒக். 03

திருகோணமலை உப்புவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த முருகையா அசோக்குமார் (வயது 35) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார்.

இந்த வர்த்தகர் தனது மனைவியுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டி படுகொலை வழக்கு: முக்கிய சாட்சி யாழ்ப்பாணம் வர அச்சம்

### நீதிமன்றில் சட்டத்தரணி தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 3

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் பதின்மூன்று பொது மக்கள் படுகொலை செய்யபட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் முக்கிய சாட்சி யாழ்ப்பாணம் வருவதற்கு அச்சம் தெரிவித்துள்ளார்.

இவ் வழக்கு நேற்று ஊர்காவற்துறை மேலதிக நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். றெமேடியஸ் மேற்படி விவரத்தை தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தங்கியுள்ள முக்கிய சாட்சியான பெண் யாழ்ப்பாணம் வந்து, வழக்கில் சாட்சியம் அளிக்கவோ, அடையாள அணிவகுப்பில் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்டவோ அச்சம் கொண்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா, திருகோணமலை ஊடாக வந்து யாழ்ப்பாணத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு நிதி கொடுத்த சர்ச்சை: எதிரணியின் கருத்து இன்று தெரியும்

### ரணில்-மங்கள கூட்டாக செய்தியாளர் மாநாடு

கொழும்பு,ஒக.03

வடக்கு - கிழக்கில் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து, தாம் பணம் பெறவில்லையென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், மங்கள சமரவீரவும் இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்தித்து தமது பக்கக் கருத்துக்களை தெளிவுபடுத்தவுள்ளனர்.

இச்சந்திப்பு இன்று காலை 11 மணிக்கு கொழும்பு - 07, கேம்பிரிஜ் பிளேஸில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மஹிந்த தரப்பிடமிருந்து புலிகள் பணம் பெறவில்லையென்று தமிழ்ச்செல்வன் கூறியுள்ளபோதிலும், பணம் பெற்றதற்கான ஆதாரங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டோரின் உறவுகளைச் சந்திக்க ஐ.நா. அமைப்பாளருக்கு முட்டுக்கட்டை

கொழும்பு, ஒக். 03

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகள் தொடர்பான விடயங்களைக் கண்காணிக்கும் ஐ.நாவின் விசேட இணைப்பாளர் மேன்பிரட் நொவக், கடத்தப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்திப்பதற்கு அரசு முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது எனச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மேன்பிரெட் நொவக், இலங்கைக்கான பயணத்தை அரசின் சார்பில் மனித உரிமைகள் அமைச்சே ஒருங்கிணைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அதனால் பல உண்மைகளை வெளிப்படுத்தி, மஹிந்த அரசை அம்பலப்படுத்தும் வகையிலான சந்திப்புகளில் அவர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று அரச தரப்பில் ஒரு பிரிவினர் கூறிவருகின்றனர். ஆனால் அத்தகைய அனுமதியை வழங்காவிட்டால் அது பாரதூரமான விடயமாகி விடும் என்று அரச தரப்பில் மற்றொரு பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியக் கொடுப்பனவு

வலி. தென்மேற்கு, ஒக். 3

அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கான ஒக்ரோபர் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை முதல் வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளது. (1-135)

## கண்ணீர் அஞ்சலி




எமது பகுதி கிராம உத்தியோகத்தர்
**க.வாமதேவன்**
அவர்களின் அன்பு மாமன்
**அமரர் வே.சின்னத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(66443) **மட்டுவில் மத்தி மக்கள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 ★ 11 ★ 1976



உதிர்வு 15 ★ 10 ★ 2006

**அமரர் சபாரத்தினம் அருந்துரை**
*(கண்ணன் - கிறிஸ்தவக் கல்லூரி ஊழியர் - கோப்பாய்)*

அகவிளக்கு அணைந்து ஓராண்டு ஆனதோ
ஓராண்டு என்ன? ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
உம் அன்பு முகம் எம் நெஞ்சை விட்டு அகலாது
உமது ஆத்மா சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கும்.

*கோப்பாய் வடக்கு, கோப்பாய்.* (66432) **குடும்பத்தினர்.**

## மூன்றாம் ஆண்டு நினைவாக



இறையடி சேர்ந்த
**வைத்திலிங்கம் குருசாமி**
25.10.1940 - 03.10.2004

பாசமதால் கட்டியாண்டு பண்புடனே வளர்த்தெடுத்து
பாரகத்தே நாம்சிறக்கப் பலநலன்கள் காட்டிநின்று
நேசமுடன் கோயிலதாய் எம்நெஞ்சைக் கொண்டவனே!
நிலவுலகை நீவிடுத்து நெடுந்தூரம் சென்றிடினும்,
நீ கொடுத்த பணியதனை நிறைவுடனே நடாத்திவிட்டு
மாசுபடா உன்நினைவை மனமதிலே சுமந்துகொண்டே!
மக்கள்நாம் விருப்புடனே மூவாண்டு நினைவதனில்
ஆசைமிகு தந்தையரே! அகங்குழைந்து தங்களது
பாதமலர் எங்களது கண்ணீரால் நனைக்கின்றோம்.

**உதயசூரியன் வீதி, உடுவில்.**
**03.10.2007**
**மனைவி, பிள்ளைகள்.**

## கல்வியியற் கல்லூரி உள்ளக பயிற்சி ஆசிரியர் கூட்டம் சனியன்று

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவும் அன்று வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார். (அ)

## முகாமைத்துவ உதவியாளர் நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் மூவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் 3இற்கு ஆள்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் மூவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு ஏற்கனவே 63 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

என். சுபாசினி (குமாரசாமி வீதி, கந்தர்மடம்), ஆர். புவணா (மாதகல் கிழக்கு), ஈ. சிவாஜினி (கைதடி தெற்கு) ஆகியோரே இப்போது அழைக்கப்பட்டுள்ளவர்களாவர். (அ-1)


### வேலையாள் தேவை

**கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை (ஆண்/ பெண்). (கையடகத் தொலைபேசி பற்றிய பூரண அறிவு விரும்பத்தக்கது).**

*தொடர்பு: இல. 10, யாழ். போன் சொப், நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.*


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவியும் ஆசிரியருமான, திருமதி கிருபாகரன் சிவகலை அவர்களின் அன்புத்தந்தை
**ஆசிரியமணி பஞ்சாட்சரம்**
அவர்கள் 02.10.2007 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.
**அதிபர், ஆசிரியர்கள்,**
**கல்விசார உத்தியோகத்தர்கள்.** (66449)

## கண்ணீர் அஞ்சலி

2004 "A" பிரிவு தாதிய மாணவி
செல்வி அ. சிரோன்மணி
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி அந்தோனி முத்து கிறகோரி**

**அவர்களது மறைவிற்காக அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.**

தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
அதிபர், போதனாசிரியர்கள்,
2004 "A" பிரிவு, 2004 "B" பிரிவு, 2006 "A" பிரிவு, 2006 "B" பிரிவு, தாதிய மாணவர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
(66509)

## ஆலயத்தில் தங்கி வரும் அனாதரவான பெண்

சித்த சுவாதீன மற்ற வயோதிப் பெண் ஒருவர் அனாதரவாக எவரது கவனிப்பும் இன்றி கடந்த ஒரு வாரகாலமாக கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்தில் தங்கியுள்ளார்.

தாம் ஆவரங்காலைச் சேர்ந்தவர் என்றும் தனது பெயர் சின்னம்மா எனவும் அந்த வயோதிபப் பெண் கூறிவருகிறார்.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க இந்தப் பெண்ணை சம்பந்தப்பட்ட உறவினர்கள் ஆலயத்திற்கு வந்து பொறுப்பேற்று கூட்டிச் செல்லுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (1-224)

## மரண அறிவித்தல்கள்

### *சந்திரசேகரம்பிள்ளை பராபரை*

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சந்திரசேகரம்பிள்ளை பராபரை நேற்று முன்தினம் (01.10.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் மகளும் நீலாயதாட்சி (மருத்துவ அதிகாரி), காயாரோகணன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் . பல்கலைக்கழகம்), சிவானந்தவல்லி (ஆசிரியர்- வவு. தமிழ் ம.ம.வி.) ஆகியோரின் சகோதரியும் வி.பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மாவட்ட மருந்தாளர்), க.தபோநிதி (ஆசிரியர்- கொக்குவில் ஞானபண்டிதா) ஆகியோரின் மைத்துனியும் அரவிந்தன், சுதர்சன் (ஆஸ்திரேலியா), சிவதர்சன் (U.K) ஆகியோரின் சிறியதாயாரும், சௌமி, சௌஜா, கஜானன், சௌஜந்தி ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2007) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. - *011 2726442,*
*0777 314166*
தகவல்:
வி.பாலச்சந்திரன் (மைத்துனர்).
(சி-53890)

### *ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்*

*(முன்னாள் அதிபர், யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)*



உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த அருணாசலம் பஞ்சாட்சரம் 02.10.2007 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - இரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான அல்லமா பிரபு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) அன்புக் கணவரும், வாசுகி (ஆசிரியை, யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), சிவகலை (ஆசிரியை, யா/கொழும்பு பாணந்துறை முஸ்லிம் வித்தியாலயம்), கணேசன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), அம்பிகை (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பூபாலையா (நடராசா), அன்னலிங்கம் (சிவப்பிரகாசம்) அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மன்மதராசா (ஆசிரியர், செங்குந்த இந்துக்கல்லூரி), கிருபாகரன் (விளையாட்டு அதிகாரி), அகல்யா (ஆசிரியை, யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அருமை மாமனும் புராதனி, அபிலக்ஷன், விபூஷன், வைஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ந.வாலாம்பிகை, சி.இரத்தினபூபதி, அ.சோதிமணி, சோ.பரமசாமி, அ.நித்தியானந்தன், அ.சதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2007) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*
*தொ.பே- 021 222 6510.*
(66450)
தகவல்:
குடும்பத்தினர்.

### *பத்மநாதன் பத்மலோகன் (அப்பன்)*



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பத்மலோகன் 29.09.2007 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் பத்மநாதன் - லலிதாராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் தவநாயகியின் மருமகனும் கிருஜாவின் அன்புக் கணவரும் பாமினி, விமலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சூரியகுமார், இன்பராஜா ஆகியோரின் மைத்துனரும் அஜிதன், கயந்தன், தேனுஜா, கஜிதன் ஆகியோரின் அன்பு மாமனும் விஸ்வலிங்கம், செல்வராசா, ராசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மருமகனும் நகுலன் (சுவிஸ்), பத்மா (சுவிஸ்), றமேஸ், பாலேஸ் (சுவிஸ்), சிவபாதம், விஜயராஜ், நடனம், மதுரா, கீர்த்திகா, நிமல்ராஜ் ஆகியோரின் அத்தானும் கனகம்மாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.09.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்; நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டடி,*
*சோழபுரம்.*
(66510)
தகவல்:
சூரியகுமார்.

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



### அரியகுணராசா கார்த்திகா

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 16.08.1981 | 03.10.2003 |

நான்கு ஆண்டுகள் சென்றும் உன்
நினைவுதனை மறக்க முடியவில்லை
உன் திருமுகத்தை காணாது
தினமும் ஏங்கித் தவிக்கின்றோம்
இப்பிறப்பில் எப்போது
உன்னை இனி காண்பது

*முதலாம் கட்டை,*
*புலோலி மத்தி,*
*பருத்தித்துறை.*
(சி-53887)
**குடும்பத்தினர்.**

## 32ஆம் ஆண்டு நினைவலைகள்



**தாய் மண்ணில்**
**(ஏழாலை)**
**16 - 08 - 1948**
**இறையடி**
**03 - 10 - 1975**

### அமரர் இராசரத்தினம் சுந்தரலிங்கம்

முப்பத்திரண்டு ஆண்டுகள் சென்றாலும்
முடியாமல் தொடருகின்ற உங்கள் நினைவுகளுடன்
வேகின்ற நெஞ்சங்களாக என்றுமே வாழ்கின்றோம்
உங்கள் கனவுகளை நனவாக்க திடமாக
என்றென்றும் வாழ்ந்திடுவோம் அப்பா...
ஆத்மசாந்தி பெற கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

**நீங்காத நினைவுகளுடன்**
அன்பு மனைவி - சிவாணி சுந்தரலிங்கம்
அன்பு மகன் - சுந்தரலிங்கம் மகிரதன்
அன்பு மருமகள் - மகிரதன் ரதனா
அன்பு பேரன் - மகிரதன் சஜீத்
மற்றும் ஏனைய குடும்பத்தினர்கள்.

*சம்பியன் லேன,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(66448)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாட்சாயிணியின் 'இளவேனில் மீண்டும் வரும்' நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினரும் மல்லாகம் நீதிபதியுமான திருமதி சறோஜினி இளங்கோவன், நிகழ்வின் தலைவர் கலாநிதி க.குணராசா ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், கல்வயல் வே.குமாரசாமியிடமிருந்து நூலின் முதல்பிரதியை முன்னாள் அதிபர் மு.நாகேந்திரராஜா பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.
[படங்கள் - லஸ்மன்]

# யாழ்.பல்கலைக்கழகத்தின் துறைசார் பதவிகளுக்கு பட்டதாரிகளை ஆளணிகளாக நியமிக்க வேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக்.3

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் போது யாழ்.பல்கலைக்கழகத்தின் துறை சார்ந்த பதவிகளில் நிலவும் ஆளணி வெற்றிடங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம் பிள்ளை ஆலோசனை தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலையின் பல்வேறு துறைகளை அணிசெய்ய முதலாம், இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்த பட்டதாரிகளை ஆளணியாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருந்தோம்.

பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக அமைச்சர்களுக்கும், செயலாளர்களுக்கும், உயர்மட்ட பணிக்குழுக்களுக்கும் கடிதம் மூலம் விளக்கினோம். ஆனால் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மாறாக அரச திணைக்களங்களுக்கு திட்டமிடப்படாத வகையில் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வித் தகைமையில் அதிகூடிய வினைத்திறன்மிக்க இளைஞர்களைத் தேவையுள்ள எமது பல்கலைக்கழகத்திற்கு வழங்கியிருந்தால் - இன்று எமது பாரிய கல்வித் தேவை நிறைவடைந்த நிலையில் சென்றிருக்கும். தற்போது பல்வேறு திணைக்களங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதும் அவசியம் என்றார். (202 - 95)

# சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத்திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பிரதேசத்தில் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

வலயம் 15 இன் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் அண்மையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு விஜயம் செய்த போது இந்த நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சங்கத்தானையில் ஆரம்பிக்கவுள்ள மணப்பெண் அலங்காரத் தொழிற் பயிற்சி நிலையத்தினை நாடாவெட்டி ஆரம்பித்து பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இம் மாதம் ஆரம்பிக்கவுள்ள மரம் நடுகைத் திட்டத்திற்கென 100 மரக் கன்றுகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மட்டுவிலில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட மேலும் 15 பேருக்கு இந் நிகழ்வில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கழகத்தினால் நடத்தப்படும் இலவச தையல் பயிற்சி நிலையத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்ட வலையத் தலைவர் பயிலுநர்களின் பயிற்சிக்குத் தேவையான ஒரு தொகுதி மூலப் பொருள்களை பயிற்சி ஆசிரியரிடம் கையளித்தார். (202-207)




# உள்ளூர் கைப்பணி உற்பத்திகளை மேம்படுத்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.3

கைப்பணித்துறையில் ஈடுபட்டுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினர் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் கைப்பணிக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளனர்.

விரைவில் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள கைப்பணிக் கண்காட்சிப் போட்டியில் பங்குபற்றவென யாழ். மாவட்ட ரீதியாக அனுப்பப்படவுள்ள கைப்பணிப் பொருள்களைத் தெரிவுசெய்யும் முகமாகவும் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளதாகத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் திருமதி பொலின் பெனராஜ் தெரிவித்தார்.

இக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் கைப்பணியாளர்கள் தங்கள் ஆக்கங்களை தத்தமது பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கென போட்டி தனியாக நடத்தப்படவுள்ளது.

கண்காட்சியில் - போட்டியில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய கைப்பணிப் பொருள்களின் விவரம் வருமாறு:

மட் பாண்டம், நார், புல்லினங்கள், பனை ஓலை என்பவற்றால் செய்யப்பட்ட ஆக்கங்கள், கீழைத்தேய ஆக்கங்கள் (சணல், பஞ்சு அல்லது பருத்தி), உலோகப் பொருள்கள் - ஆபரணங்கள் (உலோகம், கற்கள் பதித்தல்), இசைக் கருவிகள் (கீழைத்தேயம், மேலைத்தேயம்), துணிகளால் செய்யப்பட்ட ஆக்கங்கள், றேந்தை, மரத்தால் செய்யப்பட்ட ஆக்கங்கள், தோல் உற்பத்திகள். (202)

# சுழிபுரம் வயல்களில் உழவு வேலை ஆரம்பம்

சுழிபுரம், ஒக்.3

சுழிபுரம் பிரதேசத்தில் வயல் நிலங்களை உழுது பண்படுத்தும் வேலைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் வயல் நிலங்கள் நல்ல ஈரப்பதனில் இருப்பதைப் பயன்படுத்தி பண்படுத்தும் வேலைகளில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (202 - 28)

# கல்வயல் விவசாயிகளுக்கு கடன் உதவி

யாழ்ப்பாணம், ஒக்.3

சாவகச்சேரி, கல்வயல் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த மேலும் 25 விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்கப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையினால் விவசாய சம்மேளனத்தின் ஊடாக தலா 25 ஆயிரம் ரூபா வீதம் கடனாக வழங்கவுள்ளதாகச் சம்மேளனச் செயலாளர் அ.பற்குணநாதன் தெரிவித்தார்.

சம்மேளனத்தைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு ஏற்கனவே இலங்கை வங்கி விவசாயக் கடன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202 - 207)

# டேவிற்முகாம் இனந்தெரியாதோரால் எரித்துச் சேதம்

உடுப்பிட்டி, ஒக்.3

வடமராட்சி, நவிண்டிலில் உள்ள டேவிற்முகாம் கடந்த வியாழக்கிழமை இனந் தெரியாதோரால் எரித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இம் முகாமில் தங்கியிருந்த இராணுவத்தினர் வெளியேறி இரு தினங்களுக்குள் இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இரவு 7 மணியளவில் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் காலையில் முகாம் வெடித்துச் சிதறியும், எரியுண்டும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-155)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக்.3

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு,

**கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை**

பா.ஜெனார்த்தன் (163), யோ.சுஜீவதனி (148), சி.லுதர்சன் (147), சி.கஜராம் (147),

**பருத்தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை**

சி.ஜிவாந் (153), ம.மணிவண்ணன் (151),

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**

ச.விதுஷ்லா (155), மு.மதுராந்தகி (150), ப.சுதர்சன் (149), ம.திலக்சன்(141), இ.பிரவீணா (176), அ.அனித்துஷா (166), ச.லஜீபன் (161), நி.பிரியங்கா (159), க.தனுசாந்த் (157), ரா.பிரதீப்ராஜ் (153), சா.தனுசா (149), க.வாரணன் (143), ச.ஜனனி (142), த.ஜகீசன் (140),

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

வி.துவாரகன் (167), ப.லோகாசனன் (166), வி.விஜினா (164), கி.லக்சனா(162), அ.அகல்ஜன் (156), ர.தர்சனா (163), ஞா.ஆரபி (156), கு.ராஜ்கரன் (153), ம.ஜதுர்ஷா (151), ப.நிசாந்தன் (151), தே.தனுஷன் (148), மோ.பவதாரணி (146), ம.கீர்த்திவர்மன் (142) தி.லோஜினி (142), க.தேனுகா (141),

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.பதுசன் (160), [illegible] (148), ம.[illegible] (145), இ.நிருஜன் (144), பா.டா[illegible]கா (140).

(வளரும்)

# நவாலி வாசி அதிகாலையில் வீட்டிலிருந்து கடத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.3

நவாலி வடக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இளைஞன் ஒருவர் வெள்ளைவானில் வந்தோரால் கடத்தப்பட்டார் என்று அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தருமேசன் (வயது 34) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

அவரது வீட்டில் வைத்தே அவர் கடத்தப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# தம்பசிட்டி வீதி சேதம்: பயணிகள் சிரமம்

குடத்தனை, ஒக்.3

பருத்தித்துறை, ஓராங்கட்டைச் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் தம்பசிட்டி வீதி மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால் இவ் வீதியால் பயணிப்போர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வீதியிலேயே பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகள் இருக்கின்றன. ஆதலால் இப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202 - 78)

# சாமணந்தறை கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

அல்வாய், சாமணந்தறை கிராமத்திற்கு புதிய மின்மாற்றி ஒன்றை வடமராட்சி மின்சார சபையினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இக் கிராமத்திற்கு இதுவரை காலமும் மின்மாற்றி அமைத்துக் கொடுக்கப்படாமையால் பிரதேச மக்களும், பொது நிறுவனங்களும் மின்சாரத்தைச் சீராகப் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமப்பட்டனர்.

இது தொடர்பாகப் பிரதேச மறுசீரமைப்புக் குழுவினர் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு முறையிட்டதைத் தொடர்ந்து புதிய மின்மாற்றி அண்மையில் அமைக்கப்பட்டது. (202-135)

# மணல் விநியோகம் மீண்டும் ஆரம்பம்

குடத்தனை, ஒக்.3

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்து வசதி கருதி திருவிழாவின் இறுதி நான்கு நாள்களும் நிறுத்தப்பட்டு இருந்த மணல் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடத்தனைப் பகுதியில் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப்படும் மணல் மண் குடத்தனை ஆறாங் கட்டைப் பகுதியில் பறிக்கப்பட்டு, குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து வரும் லொறிகள், ஹண்டர்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-78)

# தலைமைப்பீட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.3

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமைப்பீட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக க.இராசையா நியமிக்கப்படவுள்ளார்.

இவர் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் யாழ். மாவட்ட (சுனாமி) உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் பணியாற்றியவர். (202 - 95)

# காசநோயாளருக்கென சமபோசா அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

காசநோயாளருக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கு யாழ்ப்பாணம் வேணி களஞ்சியத்தினர் 325 சமபோசா பைக்கற்றுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சமுதாய மருத்துவத்துறையின் ஒரு செயற்பாடாக மருத்துவத்துறை மாணவன் க.சுசீந்திரன், காசநோயாளர்களுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்திவருகிறார்.

மாணவனின் வேண்டுகோளுக்கிணங்க வேணி களஞ்சியத்தின் உரிமையாளர் கு.கங்கைவேணியன் 325 சமபோசா பைக்கற்றுக்களை அன்பளிப்புச் செய்துள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம் – சுவிற்சர்லாந்து

# வாழ்த்துகின்றோம்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் அகில இலங்கை ரீதியாக இரண்டாம் இடத்தையும், யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற

## யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்
## மணிவண்ணன் மதுஷன்



தனது தந்தை கடத்தப்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும், தனது விடாமுயற்சியினால் நடைபெற்றுமுடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் செயற்பட்டு அகில இலங்கை ரீதியாக இரண்டாம் இடத்தையும், யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று தமிழ் இனத்திற்கும், தான் கல்வி கற்ற பாடசாலைக்கும், தனது பெற்றோருக்கும் பெருமைதேடிக்கொடுத்த செல்வன் **மணிவண்ணன் மதுஷனை** எமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறோம். இம் மாணவனின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம் மாணவனின் தொடர்ச்சியான கல்வி முயற்சிக்கு உதவியாக ஒரு லட்சம் ரூபா பணவைப்புச் சான்றிதழினை வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று (03.10.2007) புதன்கிழமையன்று காலை 8 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**சுவிற்சர்லாந்து.**

**JCC OBA Switzerland**
**Postfach 102**
**4716 Welchenrohr**
**Switzerland.**

jccoba-swiss@hotmail.com
0041 78 890 27 84

(C/53881)

**MINISTRY OF HOUSING AND CONSTRUCTION**

**DEPARTMENT OF BUILDINGS**

# INVITATION FOR BIDS

**CONSTRUCTION OF LIBRARY AND VIDEO/ AUDIO BLOCK-RAMANATHAN ACADEMY OF FINE ARTS, UNIVERSITY OF JAFFNA (BALANCE WORK)**

1. **The Chairman, Regional Procurement Commitee, Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for the above works estimated at a cost of Rs.1.94 Mn. The construction period is 90 days.
2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for Grade. M8/c9 or above with the institute for construction Training and Development (ICTAD).
4. Interested Bidders may obtain further information from the **Chief Engineer's Office (Jaffna) Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00 hrs to 16.00hrs** up to.
5. A Complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer (Jaffna), Department of Buildings from 04.10.2007 until 15.10.2007 between 09.00hrs to 15.00hrs upon payment of a non refundable fee of Rs.1000/-.
6. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committe, Department of Buildings, Beach Road, Gurunager, Jaffna at or before 10.00 hrs 19.10.2007
7. All Bids shall be accompanied by a Bid Security for an Amount of Rupees Thirty nine thousand (Rs.39,000/-) which should be valid up to January 05th 2008.
8. Bids shall be valid for a period of 49 days from the deadline for submission of bids.
9. Bids will be opened soon after closing in the presence of bidders or their authorised representatives at the **Chief Engineer's Office, Department of Buildings, Beach Road, Gurunager, Jaffna.**

**Ananda C Yapa,**
Deputy Director (Planning & North) Division,
Department of Buildings
"Sethsiripaya" Battaramullai.
www.buildings.gov.lk


(C/53885)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.மண்ணில் அவதரித்த தவப்புதல்வனாம்
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் சிரேஷ்ட சீடராக இருந்து
அவர்தம் கருத்துக்களையும், கொள்கைகளையும் நூல்வடிவில்
வெளியிடும் கருமத்தினைச் செய்த கருமவீரனும்,
கருணாகரப்பிள்ளையாரின் தர்மகர்த்தாவும், கருணை
இல்லத்தலைவரும் உரும்பிராய் மத்திய மருந்தக
அபிவிருத்திச்சபைத் தலைவரும் யாழ்.சைவ பரிபாலனசபை
உறுப்பினரும் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின்
மூத்த மாணவனும் யா/உரும்பிராய் சைவத்தமிழ்
வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபருமாகிய

## ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

அவர்கள் சிவபதமடைந்தமை எமக்கெல்லாம் மாபெரும்
இழப்பாகும். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.



★ உரும்பிராய் மத்திய மருந்தக அபிவிருத்திச் சபை.
★ உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை.
★ உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் திருப்பணி சபையினர்.
★ உரும்பிராய் கணேசா சனசமூக நிலையம்.
★ உரும்பிராய் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய சமூகத்தினர்.
★ உரும்பிராய் கைலாயவாகன உபயகாரர் (பறுபதபத்தினி அம்பாள்).
★ உரும்பிராய் பறுபதபத்தினி அம்பாள் பரிபாலன சபையினர்.
★ உரும்பிராய் பேச்சி அம்மன் பரிபாலன சபையினர்.
★ யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலைச் சமூகத்தினர்.
★ உரும்பிராய் கருணை இல்லம், உரும்பிராய்.
★ யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி சமூகம்.

(66501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவி செய்யும் எத்தரப்பும் நிபந்தனை விதிக்க அனுமதி கிடையாது!

## இறைமையிலும் தலையிட முடியாது என்கிறார் பிரதம நிதியரசர்

கொழும்பு,ஒக்.3

உலக நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு உதவலாம. ஆனால், இலங்கையின் இறைமையில் தலையிடவோ இலங்கைக்கு நிபந்தனை விதிக்கவோ அவற்றுக்கு அதிகாரம் கிடையாது. அதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

- இவ்வாறு உயர் நிதிமன்றம் தெரிவித்திருக்கின்றது.

பிரதம நிதியரசர் சரத் என்.சில்வா உயர் நீதிமன்றத்தில் இதனைப் பகிரங்கமாக அறிவித்தார்.

ஆழிப்பேரலைப் பாதிப்புப் புனரமைப்புத் தொடர்பாக கொரிய நிறுவனம் ஒன்று தாக்கல் செய்திருந்த வழக்கு உய்ர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, எஸ்.மார்சூக் ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன் எடுக்கப்பட்டபோதே பிரதம நீதியரசர் இப்படி அறிவித்தார்.

மேற்படி நிறுவனத்தினால் சுமார் 80 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் ஆழிப்பேரலை புனரமைப்புத் தொடர்பான வீட்டுத்திட்டம் மற்றும் வீதி அமைப்புத் திட்டம் ஆகியவற்றை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தினால் தடை உத்தரவுக் கடிதம் ஒன்று மேற்படி கொரிய நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

அதை ஆட்சேபித்தே மேற்படி நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. சில-மாதங்களுக்கு முன்னர் அந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், மேற்படி ஜனாதிபதி செயலகத்தின் தடை உத்தரவுக் கடிதத்தை இடைநிறுத்தி பணிப்புரை விடுத்திருந்தது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்றுமுன் தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இவ்வாறு சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு உதவி செய்ய வரலாம், ஆனால், இலங்கையின் இறைமையில் தலையிடவோ, இலங்கைக்கு நிபந்தனை விடுக்கவோ அவற்றுக்கு உரிமையேயில்லை என பிரதம நீதியரசர் உறுதிபடத் தெரிவித்தார்.

வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(சி)

# ஜெலட்டின் குச்சிகள் கடத்திய இருவர் கைது

மன்னார்,ஒக்.3

மன்னார், சிறுநாவற்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த சனிக்கிழமை ஜெலட்டின் குச்சிகளை கடத்தி வந்த இருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர்கள் சிறுநாவற்குளம் வீதியூடாக கார் ஒன்றில் பயணித்தபோது குறித்த காரை இராணுவத்தினர் சோதனையிட்ட வேளையே காரின் பின்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்த 186 டைனமேற் ஜெலட்டின் குச்சிகளைக் கைப்பற்றினர்.

இதன்போது கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் டைனமேற்களையும் சிறுநாவற்குளம் இராணுவத்தினர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(202)

# படுவான் கரையில் தொழில் பாதிப்புற்ற அனைவருக்கும் நிவாரணம் வழங்குக!

## அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,ஒக்.3

''படுவான்கரை மீதான இராணுவ நடவடிக்கையின்போது அங்கு தொழில் செய்து வந்த படுவான் கரையைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தவர்களும் தமது தொழிலை இழந்துள்ளனர். எனவே, அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்''

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுவை வருமாறு:-

படுவான்கரை மீதான படை நடவடிக்கையின் போது அங்கு வாழ்ந்து வந்த மக்கள் தமது தொழில்களைவிட்டுவிட்டு இடம் பெயர்ந்தனர்.

படுவான்கரையைச் சொந்த இடமாகக் கொண்டிராத சித்தாண்டி, கிரான், ஏறாவூர், மட்டக்களப்பு நகர், வந்தாறு மூலை, புதுக்குடியிருப்பு, எருவில், துறைநீலாவணை உள்ளிட்ட பல இடங்களைச் சேர்ந்த மக்களும் படுவான் கரையில் தொழில் செய்து வந்தனர்.

இப்போது, அவர்கள் படுவான்கரைக்குச் சென்று தொழில் செய்ய வாய்ப்பில்லாதிருப்பதால் அவர்களின் தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அகதிகள் அல்லர் எனக் கூறி அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு மறுக்கின்றது. இது தொடர்பாக அம் மக்கள் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர். எனவே, இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பர் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார் - என்றார்.

(சி)

# தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம் வெள்ளியன்று பண்டாரநாயக்கா மண்டபத்தில்

கொழும்பு,ஒக்.3

தேசிய ஓய்வூதியர் தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதையொட்டிய விழா அன்றைய தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதியர் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலகரட்ண தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பார்.

(202-95)

# வாசகர் திருமுகம்

## தருத்து நிறுத்துவது யார்?

எமது கிராமமாகிய நவாலியிலும் அயற் பிரதேசமாகிய மானிப்பாயிலும் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளன. சம்பந்தப்பட்ட கிராம சேவையாளருக்கு இதுபற்றி கடித வாயிலாகத் தெரிவித்தேன். இதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. யாழ்.மதுவரித் திணைக்களத்திற்கும் இது தொடர்பாகக் கடிதம் ஒன்று அனுப்பினேன். அவர்களும் அக்கறை செலுத்தியதாக இல்லை.

சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு குழுவை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நியமித்திருப்பதாக பத்திரிகை வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது. எமது கிராமத்தில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்து வருகின்றது. மதுப்பிரியர்கள் அதனை அருந்திவிட்டு வீதிகளில் தகாத வார்த்தைகளைப் பேசுகிறார்கள். சிறுவர்களைச் சென்றடைய வேண்டிய பணம் வீண் விரயமாகின்றது. இது தொடர்பாக உங்களால் நடவடிக்கை எடுக்கமுடியுமா எனக் கேட்டு அந்தக் குழுவுக்கும் கடிதம் அனுப்பியிருந்தேன். அதற்கும் பலன் கிடைக்கவில்லை.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர், சிறுமியர் (மாணவர்கள்)களுக்கு சில பாடசாலைகள் உதவிகள் புரிந்து வருகின்றன. மதுப்பிரியர்களின் குடும்பங்களில் வாழும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு கல்விக்குரிய உபகரணங்களை வழங்கி உதவி புரிய கல்விச் சமூகம் முன் வருமா?

சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனை என்பனவற்றை எமது கிராமத்தில் தடுத்து நிறுத்துவது யார்?

- சி.கந்தசாமி.

*நவாலி.*

## இளவலைக்கான இ.போ.ச. சேவை

உணவு, உடை, உறையுள் அத்துடன் போக்குவரத்தும் மனித வாழ்வின் அன்றாட தேவைகளில் ஒன்றாக விளங்குகிறது. மனித நாகரிக வளர்ச்சியில் போக்குவரத்து பெரும் பங்கினை வகிக்கின்றது. அன்றாட மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்து அவசியமானதொன்றாக விளங்குகின்றது. இந்தவகையில் இளவாலை கிராமத்திற்கான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ப்ஸ் சேவை சீரில்லாதபடியால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. தனியார் சிற்றூர்திகளில் நீண்டநேர காத்திருப்புக்களின் பின்பு மிகவும் சிரமங்களிற்கு மத்தியில் இக்கிராம மக்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1995ஆம் ஆண்டு யாழ். இடம்பெயர்வுகளின் பின்பு அதாவது 1996 -2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீரான சேவையை வழங்கி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையானது 2003 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நேர கிரமமாகவோ, ஒழுங்குமுறையாகவோ சேவையில் ஈடுபாடமலுள்ளமை மக்களுக்கு பெரும்சிரமத்தையும் சலிப்பையும் வேதனையையும் அளிப்பதாக உள்ளது.

பிரபல்யமான மூன்று உயர்தர பாடசாலைகளும் மற்றும் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளையும் கொண்ட கிராமமாக உள்ள நிலையில் இவர்களின் சேவை இக்கிராம மக்களுக்கு அவசியமானதொன்றாகும். பாடசாலை ஆரம்பமாகும் வேளையி லும் முடிவடையும் வேளையிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பல சிரமங்களிற்கு மத் தியில் பாடசாலை பஸ் சேவையில் பயணிக்கிறார்கள். அத்துடன் இக்கிராமத்திலிருந்து நகர்புறங்களிற்கு பல்வேறு தேவைகள் நிமித்தம் செல்பவர்களும் உயர் கல்வி பயிலும் மாணவர்களும் அரச அலுவலகங்களில் தொழில்புரியும் அரச ஊழியர்கள் ஆகியோர் இந்த பஸ் சேவையைப் பெறமுடியாமல் மனம் வெதும்பிய நிலையிலேயே தங்கள் பயணங் களை தொடர்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

1997ஆம் ஆண்டு முதல் 788, 764, 769 மார்க்கங்களினூடாக சேவையிலீடுபடுத்தப்பட்ட பேருந்துகள் இப்போது அதிலும் 769 தவிர்ந்த மற்றைய மார்க்கங்களான 788, 764 காலை 6.15, 7.00 மாலை 4.30 மணி சேவையில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஏனைய சேவைகள் காரணம் எதுவுமின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும் தெல்லிப்பழை ஊடாக நடைபெறும் 795 இலக்க பஸ் சேவை ஒழுங்காக நடைபெறுகிறது. எனினும் இப் பகுதிக்கு 788 இலக்க பஸ் சேவையே முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

பெருமளவானோர் இந்த 788 இலக்க பஸ் சேவையை நம்பித்தான் தொழில்களுக்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு இப்போது தனியார் பஸ் சேவைதான் இயன்றளவு கை கொடுத்து வருகின்றது. அதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். எனவே நிறுத்தப்பட்ட சேவைகள் சீர்திருத்தப்படவேண்டும் என்பது இம்மக்களின் அவா. இதன் மூலம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

எனவே மக்களின் நலனில் அக்கறை கொண்டு சீரான போக்குவரத்து சேவையினை மேற்கொள்ளவேண்டியது யாழ்.சாலை அதிகாரியின் பொறுப்பாகும். எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மக்களின் குறையைத் தீர்த்து வைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

- வி.மதுமிதா

*இளவாலை.*

# கொட்டாஞ்சேனைப் பகுதியில் இளம் பெண் கடத்தப்பட்டார்

எட்டு வயது முதல் கொழும்பில் வாழ்ந்து வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 வயது இளம் பெண்ணை விசாரணைக்கு அழைத்துச் சென்ற பிறகு காணாமல் போயுள்ளார் என உறவினர்கள் வெள்ளவத்தைப் பொலிஸாரிடமும், கொழும்பு மாவட்ட மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரிடமும், வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சிப் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடமும் முறையீடு செய்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை புளுமெண்டல் வீதியில் தனியார் தொடர்மாடி வீட்டில் வசித்து வந்த ஜெயபிரபா விஜயகுமாரி (வயது -27 ) என்ற பெண்ணே வெள் ளவத்தையில் வைத்து இனந்தெரியாதோரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி வெள்ளவத்தையில் வசிக்கும் தனது மாமியின் வீட்டுக்குச் சென்ற ஜெயபிரபா அன்று மாலை 5.30 மணிக்கு கொட்டாஞ்சேனையிலுள்ள வீட்டுக்கு தனது கையடக்கத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தான் தெஹிவளையில் இருக்கிறார் எனவும் சிலர் தன்னை அழைத்துச் சென்று விசாரிப்பதாகவும் விசாரணை முடிந்து வெள்ளவத்தை மாமியின் வீட்டுக்குப் போகிறேன் எனவும் கூறியுள்ளார்.

### வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டது

அன்று வீடு திரும்பாத ஜெயபிரபா மறுநாள் 26 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு தனது வங்கிக்கணக்கில் 50 ஆயிரம் ரூபா பணம் போடும்படியும் தான் மிகுந்த பிரச்சினையில் சிக்கியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். அதிர்ச்சியடைந்த உறவினர்கள் போயா தினமாகையால் வங்கிகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மறுநாள் 25 ஆயிரம் ரூபாவை ஜெயபிரபாவின் கணக்கில் வரவு வைத்துள்ளனர்.

28 ஆம் திகதி சம்பந்தப்பட்டவர்களால் விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிவித்து வெள்ளவத்தை மாமி வீட்டுக்குத் திரும்பிய ஜெயபிரபாவை பிற்பகல் 1.30 மணியளவில் அதேநபர்கள் மறுபடியும் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற பிறகு நேற்று மாலை வரை எதுவித தகவலும் பெறமுடியவில்லை. இவ்விடயம் தொடர்பாக பிரதி அமைச்சர், பொலிஸ் மா அதிபர், வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, காணாமல் போனோர் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளைக் கண்காணிக்கும் குழு ஆகியோரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(க)

# உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறுமாறு சந்திரிகாவுக்கு உத்தரவு

கொழும்பு,ஒக்.3

கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மஹிந்த அரசு உத்தரவிட்டுள்ளது என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் இது விடயம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செயலாளர் பி.திஸநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்திலேயே இந்த வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

அந்தக் கடிதத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுவதுடன், அரசால் வழங்கப்பட்ட பொருட்களும் திரும்ப ஒப்படைக்கப்படும் என்றும் சந்திரிகாவின் செயலர் பி.திஸநாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

சந்திரிகாவின் சிறப்புரிமைகளை ரத்துச் செய்து உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலையில் 2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பின்வருமாறு

01. கெங்காதரன் மதுரதன் - 154 புள்ளி
02. இரத்தினசிங்கம் துஸாந்தி - 153 புள்ளி
03. இரங்கநாதன் அகிம்சா - 141 புள்ளி





**கெ.மதுரதன் இ.துஷாந்தி இ.அகிம்சா**

இவர்கள் மேலும் பல தேர்ச்சிகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் இதற்கான ஊக்கமும் வழிகாட்டல்களையும் வழங்கிய அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை,
சாவகச்சேரி.
(66377)

## யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம்

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் - 2007**

முதலாம் பரிசு இல. 1654
இரண்டாம் பரிசு இல. 0849
மூன்றாம் பரிசு இல. 1443
ஆறுதல் பரிசுகள்:
இல. 2203, இல. 0116, இல. 1202

-பழைய மாணவர் சங்கம்.
(66419)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் **தவராஜன் குணதீபன்**



மண்ணில் 29-02-1984 விண்ணில் 03-10-2006

ஆண்டவர் அழைத்து ஓராண்டு
ஆனாலும் என் அன்பு மகனே
தீபன் உன் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு நீங்காது!

என்றும் நினைவுகளுடன்:
மனைவி- சிவரஞ்சினி,
அப்பா- தவராஜன், அம்மாசந்திரகுமாரி
சகோதரர்கள்- குணசீலன், குணசீலி, றேணுகா.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
(66416)

## 31ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 03 . 1944



மறைவு 04 . 09 . 2007

அமரர்

**வைத்திலிங்கம் குலரட்ணம்**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குல விளக்காய் ஒளிதந்த அன்புத் தெய்வமே!
ஈடு செய்ய முடியாத உங்கள் இழப்பினால்
கதிகலங்கி வாடுகின்றோம்...
மாதமொன்று ஓடி மறைந்தாலும்
மறையாது உங்கள் நினைவலைகள்
எம் நெஞ்சில் உயிர் உள்ளவரை.

கடந்த 04.09.2007ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் குலரட்ணம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமது துயரில் பங்குகொண்டு நேரில் வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் மலர்வளையங்கள் வைத்தும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும் மற்றும் தபால், தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல் மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த நல்ல உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (04.10.2007) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

273/11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/53875)

குடும்பத்தினர்.

ஓம் சாய் ராம்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் - 2007
கலைமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த
உமாசங்கர் கமலோஜினி தம்பதியரின்
செல்வப் புதல்வி **ஆரபி**
*(யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)*

மேற்படி பரீட்சையில் 160 புள்ளிகள் பெற்று சிறப்பாகச் சித்தியடைந்தமையை உளமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம். மேலும் கல்வியில் முன்னேறிப் பல சாதனைகள் புரிய பகவான் சாயியின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*ஜெய் சாய் ராம்.*

பகவான்
ஸ்ரீ சத்ய சாய் சேவா நிலையத்தினர்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(66379)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் ம.தயானந்**

2007 இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ள **யா/நெல்லியடி மெ.மி.த.கலவன்** பாடசாலை மாணவனும் நெல்லியடி **மகேஸ்வரன் ரதி** தம்பதியரின் செல்வப்புதல்வனுமாகிய செல்வன் தயானந் மென்மேலும் கல்வியில் பல சிறப்புகளைப் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, மாமா, அத்தை,
அம்மம்மா, அம்மப்பா, சித்தப்பா.

நெல்லியடி,
கரவெட்டி.
(சி/53859)

## உயர் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,ஒக்.3

இலங்கை உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் பயிற்சி நெறிகளில் கல்வியாண்டு 2008இற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள 17 உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்படவுள்ள முழுநேர மற்றும் பகுதிநேர பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை, மட்டக்களப்பு, தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடத்தப்படும் பகுதிநேர பாடநெறிகள் தமிழ்மொழி மூலம் நடத்தப்படும்.

விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 26.10.2007 ஆகும்.

(202-86)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொம்மேரியன் நாய்க்குட்டிகள் கறுப்பு, பிறவுண் (45 நாள்கள்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஜெ.சுசிகரன்,
செட்டியார்மடம், அராலி வடக்கு.
077 3041649
(66408)

## தவறிவிட்டது

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த பத்மநாதன் பிரியா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (866151520V), விசேட அடையாள அ. (091034343), தொழில்நுட்பக் கல்லூரி அடையாள அட்டை என்பன 21.09.2007 யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சு.கோமதி, 443, அம்மன் வீதி, முடமாவடி, திருநெல்வேலி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHI RAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

* ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
* [illegible]
* [illegible]

T.P No:- 222 2867 222 3529
(66403)

## மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றோம்



தரம் 5 (2007) புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகள் பெற்ற
**யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை**
மாணவன்
**ரவிச்சந்திரன் ஜோய் நிஷான்**
அவர்களை மேலும் பலசிறப்புகள் பெற்று கல்வியில் உயர கர்த்தரின் கிருபையும் ஆசீர்வாதமும் கிடைக்க வாழ்த்துகிறோம்.

இவர் பரீட்சையில் சித்தியடைய ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கொக்குவில் பூட்டியம்மா, அப்பப்பாமார்,
அப்பம்மாமார், அத்தைமார், பெரியப்பா,
அக்காமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்கள்.

செல்வபுரம்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(66425)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons up to 31.10.2007 for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

Senior Lecturer Grade I/ Senior Lecturer II / Lecturer (Probationary) in Anatomy/ Community Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Paediatrics/ Medical Education.

**Note:** 1. Applications are expected from candidates with M.B.B.S. Degree for the above posts.
2. Applications from candidates with BDS and BVSc Degree shall be considered for the posts in **Anatomy, Community Medicine, Pathology, Pharmacology and Medical Education on contract basis.**

| Post | Salary Scale |
|---|---|
| Senior Lecturer Gr. I | Rs. 42,650-7x800-48,250/- p.m. |
| Senior Lecturer Gr. II | Rs. 37,650-11x700-45,350/- p.m. |
| Lecturer (Probationary) | Rs. 26,900-10x585-32,750/- p.m. |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:
i. An academic allowance equivalent to 25% of the basic salary.
ii. Cost of living allowance of Rs. 2,125/- p.m.

**Statutory benefits:**
i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments.
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**


Applicants from the University System/ Government Depatments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA.
01.10.2007.

(C/53877)

## 6ஆம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 01 - 03 - 1939



உதிர்வு 03 - 10 - 2001

அமரர் தொண்டர் **கந்தையா திருநாவுக்கரசு**
*(சிவயோக சுவாமிகளின் அடியவரும் வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும்)*
03.10.2007

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ் நாடு தனக்கும்
என்னால் தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்."

இன்று (03.10.2007) புதன்கிழமை வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவுதின நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.

வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர்.
(66340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைகளில்....கல்விச்சாலைகளில்....




ஆனைக்கோட்டை குணபாலன் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிறுவுனர் தினம் மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை நிறுவுநர் தின உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் நா.தனபாலசிங்கம், முதன்மை விருந்தினரும் பிரதிக் கல்விப்பணிப்பாளருமான சு.சுந்தரசிவம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



அச்சுவேலி மக்கள் வங்கியினால் புனித தெரேசான் மகளிர் கல்லூரியில் மக்கள் வங்கியின் 'சிசு உதான' வங்கி அலகு ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரியறொசறியோ வங்கி அலகினைத் திறந்து வைப்பதையும் அருகில் வட வலய உதவிப் பிராந்திய முகாமையாளர் திருமதி சி.சிவனருள்சுந்தரம், மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை உதவி முகாமையாளர் திருமதி ஆர்.எம்.ஏ.தவநாயகம், எஸ்.சுகந்தன் மற்றும் உத்தியோகத்தர்களை படத்தில் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*




ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையில் உதவி அதிபராக பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற திருமதி ச.நாகமணியைப் பாராட்டி நடத்தப்பட்ட விழாவில் பாடசாலையின் அதிபர் சி.நாகையா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.மர்தவக்குமாரன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம், திருமதி சு.சுந்தரசிவம், விழா நாயகி திருமதி ச.நாகமணி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*




அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற அதிபர் அ.விசுவநாதர் நிறுவுனர் தின உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன், வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் ஆகியோரும் மேடையில் அமர்ந்துள்ளனர். *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# ஆசிரியமணி பஞ்சாட்சரம் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம்,ஒக.3

சைவப் பெரியாரும், தமிழ் அறிஞரும், பற்றாளரும், சமய இலக்கிய வித்தகரும், சமூகத் தொண்டரு, பண்டிதமணியின் அபிமானத்துக்குரிய சீடருமான ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் 80ஆவது வயதில் நேற்று தமது சொந்த ஊரான உரும்பிராயில் காலமானார்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை முடித்து வெளியேறிய அவர் 1951ஆம் ஆண்டு முதல் 37 வருடங்களாக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியர், உப அதிபர் ஆகிய பதவி நிலைகளை வகித்து கடைசியில் அதிபராக சேவையினின்றும் இளைப்பாறியவர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் அபிமானத்தைப் பெற்ற மாணவரான இவர், குருசிஷ்ய மரபைப் பேணி பண்டிதமணியின் இறுதிக்காலம் வரை பண்டிதமணிக்குத் தொண்டாற்றி வந்தவர்.

பண்டிதமணியின் கட்டுரைகள், சொற்பொழிவுகள் என்பவற்றை நூலுருவம் பெறச் செய்வதில் ஆசிரியமணி பஞ்சாட்சரம் முன்னின்று செயற்பட்டு வந்தார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை செயலாளராக இருந்து இவர் ஆற்றிய இலக்கியப் பணியைப் பாராட்டி ''தினகரன்'' பத்திரிகை இவருக்கு ஆசிரியமணி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

ஆசிரியமணி பஞ்சாட்சரம் தமது குருவான பண்டிதமணியால் 'எனக்கு வாய்த்த அனுமன்' எனப் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர்.

ஆசிரியப்பணி, இலக்கியப்பணி என்பவற்றுடன் சமயப் பணியிலும் பெரும் ஈடுபாடு காட்டி செயற்பட்ட இவர், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத் திருப்பணிச் சபைச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றி வந்துள்ளார்.

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமது ஆசிரியப்பணி, சமயப்பணி மற்றும் சமூகப் பணி என்பவை காரணமாக அவ்வூர் மக்களது அபிமானத்தைப் பெற்ற பெருந்தகை.

சிறந்த இலக்கியப் பேச்சாளராக, சமயச் சொற்பொழிவாளராக, நல்லாசிரியராக, சமூகத் தொண்டராகப் பல தோற்றங்களை வெளிப்படுத்தி வாழ்ந்த ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவரது பல்துறைசார் பணிகளில் முத்திரை பதித்துள்ளார்.

அவரது இறுதிக்கிரியைகள் நாளை உரும்பிராயில் நடைபெறவுள்ளன. (அ-201)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் குழந்தை ம. சண்முகலிங்கன் ஆசிரியரின் 'கூடி விளையாடு பாப்பா' சிறுவர் நாடகம் நாளை வியாழக்கிழமை பெரியபுலம் மகாவித்தியாலத்தில் மேடையேற்றப்படவுள்ளது. (203)

* * *

குருநகர்,ஒக்.3

நல்லூர்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான சித்திரப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்ள உள்ளனர் என நல்லூர்க் கல்விக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தெரிவித்தார். (203-51)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.3

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆசிரியர் தினம் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தந்த முன்பள்ளி அபிவிருத்திச் சபையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

* * *

வலி.தென்மேற்கு,ஒக்.3

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் நல்லொழுக்க தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் க. சிவாஜி, உப அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு பரிசில்களும் இவ் விழாவில் வழங்கப்படவுள்ளன. (203 -135)

* * *

யாழ்ப்பாணம். ஒக். 3

வலி.தென்மேற்கு பிரதேச உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா இன்று மானிப்பாய் பிரதேச சபையில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் தலைமையில் இடம்பெறும் விழாவிற்கு பிரதம அதிதியாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார்.

மேற்படி விழாவில் யாழ் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (203-95)

# தடை உத்தரவை மீறிச் செயற்பட்டதற்காக தமிழக அரசை ஏன் கலைக்கக்கூடாது?

## இந்திய உச்ச நீதிமன்றம் சீற்றத்துடன் கேள்வி

புதுடில்லி,ஒக்.3

கடையடைப்பு நடத்தக்கூடாது என்ற இந்திய உச்ச நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி தமிழக அரசு செயற்பட்டுள்ளது. எனவே அந்த அரசை ஏன் கலைக்கக் கூடாது என வினவி உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் கடையடைப்பு நடத்தக் கூடாது என இந்திய உச்சநீதிமன்றம் அதிரடித் தடை உத்தரவை வழங்கியிருந்த போதிலும், ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போல் அங்கு கடையடைப்பு நடந்துள்ளது.

இந்நிலையில், நீதிமன்றத்தின் தடையுத்தரவை மீறும் வகையில் தமிழக அரசு செயற்பட்டதால், அந்த அரசை ஏன் கலைக்கக்கூடாது என்று வினவி உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும் என்றும் உச்சநீதிமன்றம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

உச்சநீதிமன்ற உத்தரவைத் தமிழக அரசு மீறிவிட்டது எனக் குற்றஞ்சுமத்தி அ.தி.மு.க. [illegible] மனுவொன்று நேற்[illegible] நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட நிலையில், அதற்குப் பதிலளித்த சந்தர்ப்பத்திலேயே நீதிமன்றம் மேற்கண்டவாறு கண்டனங்களை வெளியிட்டது.

உச்சநீதிமன்ற உத்தரவை மீறி நேற்று முன்தினம் தமிழகத்தில் பஸ்கள் ஓடவில்லை. கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் உச்சநீதிமன்றம் தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு நீதிமன்ற உத்தரவை அமுல்செய்யத் தவறிவிட்டதாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் இந்தச் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும் என்று கூறியிருக்கும் உச்ச நீதிமன்றம், தேவைப்பட்டால் மாநில முதல்வர் மற்றும் தலைமைச் செயலாளருக்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் நீதிமன்றம் தயங்காது என்றும் எச்சரித்துள்ளது.

தமிழகத்தில் நடப்பது அரசுதானா? தமிழக அரசுதானா? என்று கேள்வியெழுப்பியுள்ள நீதிமன்றம், மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அரசு இது என்றும், இதுதான் அரசின் போக்கு என்றால் மத்திய அரசு, தமிழக அரசைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சியை ஏன் அமுல்செய்யக்கூடாது என்ற கேள்வியுடன் எச்சரிக்கை விடுத்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி தரம்-6 அனுமதி- 2008

2008 ஆம் ஆண்டு தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை 03.10.2007 முதல் பாடசாலையின் அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 20.10.2007 இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

(66430) - அதிபர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம்-5 2007 புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று வடமராட்சி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சித்தியடைந்த **செல்வி துஷிதா மனோகரன்** (மாவட்ட மட்டம் 5 ஆம் இடம்) அவர்களை மனதாரப் பாராட்டி, மேலும் கல்வியில் பல சிறப்புக்களைப் பெற்று வாழ வாழ்த்துவதுடன், அவரை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி.

*வாழ்த்துவோர்:* **பேரன், பேர்த்தி, த.ஐயாத்துரை.**

(சி.53872)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(66401)

சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் **சிவராசா திருவேள்** அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களான திருமதி யோ.பஞ்சாட்சரம், திருமதி வி.பரமநாதன், திரு.த.நந்தகுமார், திரு.க.தவயோகராசா உட்பட அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* **மாமா (குகன்) குடும்பத்தினர்,** *கோண்டாவில்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(66423)

*2007 ஆம் ஆண்டு தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவனும் எமது அன்புச்செல்வனுமாகிய* செல்வன் **ஆனந்தகுமார் வேதாகுலன்** *மேலும் பல சிறப்புகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் இவருக்கு ஊக்கமளித்த ஆசிரியர்களையும்வாழ்த்துகின்றோம்.*

*வாழ்த்துவோர்:*

டாக்கர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**அப்பா, அம்மா, தங்கை இலாவண்யா, தாத்தா, மாமாமார், அத்தைமார்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(66423)

யா/ புனித ஜோண்பொஸ்கோ அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டும் நன்றிகளும்

ஐந்தாண்டு காலமாக எமது மகன் யோ.வி.றெக்னோவை யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் நற்பண்புகளுடன் சிறந்த முறையில் கல்வி கற்பித்து இறைவன் துணையுடன் 2007 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சிறந்த முறையில் சித்தியடையச் செய்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் பல வழிகாட்டல் மூலம் உதவி செய்த ஆசிரியர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

32.முதலியார் ஒழுங்கை, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

*மாணவன் யோ.வி.றெக்னோவின் குடும்பத்தினர்.*

## கண்ணீர் அஞ்சலி



முது பெரும் தமிழ் அறிஞரும், பண்டிதமணியின் உத்தம மாணவரும், அவரின் பணியைத் தொடர்ந்தவரும், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளரும், ஆசிரியமணியும், சமூக சேவையாளரும், ஓய்வு பெற்ற அதிபரும், உரும்பிராயைச் சேர்ந்தவருமான **அ.பஞ்சாட்சரம்** ஐயா அவர்களின் அமரத்துவச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். இவரின் இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்ல; தமிழ் பேசும் நல்லுலகத்துக்கும் உரியதாகும். இவரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் தென்மராட்சி அங்கத்தவர்கள் சார்பில்

**க.பேரம்பலம்,** ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்.

(66423)



## தாக கிருகயஜ்ஞ அழைப்பு

சர்வசித்து வருஷ புரட்டாதித் திங்கள் 8ஆம் நாள் (25.09.2007) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

பிரம்மஸ்ரீ **அண்ணாசாமி ஐயர் அப்பாசாமிக் குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

17ஆம் நாள் (04.10.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணி நாரகம்.

18 ஆம் நாள் (05.10.2007) வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம் மாசிகம்

19 ஆம் நாள் (06.10.2007) சனி காலை சபிண்டீகரணம்

20 ஆம் நாள் (07.10.2007) ஞாயிறு கிருகயஜ்ஞம் (சமாராதனை)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'பிரேமசந்திர வாசா', துன்னாலை, கரவெட்டி. (66409) - குடும்பத்தினர்.

ஓம் நமசிவாய

## பரிசாரகர், நாதஸ்வரக் கலைஞர் தேவை

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
*38, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு-13.*

மேற்படி தேவஸ்தானத்தில் பணியாற்றுவதற்கு பரிசாரகர், நாதஸ்வரக் கலைஞர்தேவை. விரும்புவோர் வேலை அனுபவங்களை விளக்கும் விண்ணப்பத்துடன், நேரிலோ, கடிதமூலமோ, 011- 2338319 தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்:

(66437) - தர்மகர்த்தா.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிக குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். (அத்துடன்) Prima பேட்டுக்குஞ்சு பதிவு செய்யப்படும். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்த புறொயிலர் 1Kg 600/= மட்டும், *குமரன் பாம்*, 227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

அலுவலகத்திற்குரிய வீடு வாடகைக்கு உண்டு. ஐந்து பெரிய அறைகள், இரண்டு கோல், வாகன பாக்கிங் சகல வசதிகளுடனும் உள்ளன.

102, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0777 271334, 222 6333

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா நாகேஸ்வரி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நாகேஸ்வரி அவர்கள் கடந்த 29.09.2007 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையா (உணவு உற்பத்தி முகாமையாளர்)வின் அன்பு மனைவியும் ஜெயவிந்தன் (கனடா), மகிந்தன் (லண்டன்), கீதா (நோர்வே), சுதாகரன் (லண்டன்) காலஞ்சென்ற ஸ்காந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் நிர்மலா (கனடா). பகீரதி (லண்டன்), மகேந்திரலிங்கம் (நோர்வே), நிறஞ்சனா (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆனந்தன் (அமரர்), சுந்தரம்மா (உசன்), விக்கினேஸ்வரன் (அமரர்), பரமேஸ்வரன் (அமரர்) ஆகியோரின் சகோதரியும் நல்லம்மா, சிவராணி ஆகியோரின் மைத்துனியும் நிஜானி, சனோஜன் (கனடா), சங்கீர்த் தனன், லக்ஷிகன் (லண்டன்), வாகீசன், வினோசன் (நோர்வே), அஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2007) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*வே.கனகரட்ணம் (நேவி) (சம்பந்தி) உசன்.*

(66433)

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.3

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நேற்று முன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சிறுவர் தினத்தை அனுஷ்டித்தனர்.

கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ் வில் கழக செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் 'சிறுவர் நலன் பேணுவோம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

கழகப் பிரதிநிதிகளால் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(202-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2007 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 160 புள்ளிகள் பெற்று சித்தி அடைந்த சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் செல்வன்*

**பேரின்பநாதன் தர்ஷன்**

*மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம். அவருக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்: **அப்பா, அம்மா, அக்காமார், நண்பர்கள்.**

(சி.53889)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி பாடசாலை மட்டத்தில் முதலாமிடம் (152 புள்ளி) பெற்ற

செல்வன் **புஸ்பராசா யதூசன்**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

*கைதடி நுணாவில், சாவகச்சேரி.* (66402) **குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 இல் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவி செல்வி

**விஜயகுமார் நிஷாந்தினி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேலும் பல தேர்ச்சிகளைப் பெற்று சிறப்புடன் விளங்க வாழ்த்துவதுடன், அவரை நல்வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் வகுப்பாசிரியை மற்றும் குகன் ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, ரவி மாமா, அத்தை, அப்பப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தை, பெரியப்பாமார், பெரியம்மாமார்.

*சி.தர்மலிங்கம், அதிசய வைரவர் தேவஸ்தானம், வேலணை-5.*

(66431)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2007 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் 167 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் அதிபர், ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்த செல்வி*

உதயகுமாரன் **தேனுகானி**

அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு, மேலும் அவர் இறைவன் ஆசியுடன் கல்வியில் உயர்ந்து சாதனைகள் பல நிலைநாட்ட வேண்டுமென்று வாழ்த்துகின்றோம். இவரின் உயர்ச்சிக்கு வழிகாட்டிகளாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், விஷேடபயிற்றுவிப்பாளர்கள், பெற்றோரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, மெசியாஸ் மாமா குடும்பம், ஜீவா மாமா (ஜேர்மனி), ஜெறா மாமா (ஜேர்மனி)

*இல.25, டச்சு வீதி, சாவகச்சேரி.*

(சி.53871)

## நன்றி நவில்கின்றோம்

இன்றைய இக்கட்டான கால கட்டத்திலும் எமது கிராம மக்களின் நலன் கருதி எமது வேண்டுகோளை ஏற்று எமது கிராமத்துக்கென புதியதொரு மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் பெற வழி வகுத்த இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த

1. திரு.V. சண்முகநாதன் (மாவட்ட பொதுமுகாமையாளர்)
2. திரு.ஞானகணேசன் (மின் பொறியியலாளர்)
3. திரு.P.இராமலிங்கமூர்த்தி (மின் அத்தியட்சகர்)

ஆகியோருக்கு அல்வாய் மனோகரா மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அல்வாய் மனோகரா ஊரக மறுசீரமைப்புக் குழு.**

(66436)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்க சர்வதேசத்தின் மீது பயங்கரவாதப் பூச்சு

'குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்' - அதனையே வெளிப்படுத்துகின்றது வெளிநாட்டுப் பிரமுகர்களின் இலங்கை விஜயம் தொடர்பான ஜே.வி.பியின் சீற்றம்.

ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இலங்கைக்கு வரவிடாமல் தடுக்க வேண்டும். வந்தால் உண்மைகள் அம்பலமாகிவிடும். சிறுபான்மையினருக்கு எதிரான பேரினவாத அரசின் ஒடுக்குமுறை வெட்டவெளிச்சமாகி விடும் என்றெல்லாம் அஞ்சுகின்றது தென்னிலங்கை பௌத்த - சிங்கள மேலாண்மை அதிகாரம்.

அதனால்தான் இந்த வெளிநாட்டுப் பிரமுகர்களின் விஜயங்களுக்கு எதிராகச் சீறுகிறது ஜே.வி.பி.

இலங்கைக்கு வந்து உண்மைகளை நேரில் கண்டறிந்து, சர்வதேசப் பிரமுகர்கள் நிஜத்தை - நிதர்சனத்தை - அம்பலப்படுத்துவது ஜே.வி.பி. போன்ற தென்னிலங்கைப் பேரினவாத ஒடுக்குமுறை சக்திகளுக்கு வேம்பாய்க் கசக்கின்றது.

ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை உண்மைகளை அம்பலப்படுத்த முயல்வதால் அவை பிரிவினைவாதப் புலிகளின் கையாட்கள் அல்லது புலிகளின் நோக்கத்தை நிறைவு செய்யும் இலக்குடன் செயற்படும் சக்திகள் என்று அர்த்தம் கற்பிக்கின்றது - மூலாம் பூசுகின்றது - ஜே.வி.பி.

இந்த சர்வதேச சக்திகள் இலங்கைத் தீவின் நற்பெயரை - கீர்த்தியை - கெடுக்கும் நோக்குடனேயே இலங்கைக்கு வருகின்றன என்றும் கூறியிருக்கின்றார் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ.

ஐ.நா. அதிகாரிகள், தூதுவர்கள் இலங்கை வரவும், சுற்றிப் பார்க்கவும் அழைப்பு விடுத்து, வரவேற்று, அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கின்றது அரசு. பின்னர் அவர்கள் நாட்டுக்கும் அரசுக்கும் எதிராக 'அள்ளி வைக்கும்' அறிக்கைகளை வெளியிடும் போது அரசு முழிக்கின்றது. அவர்களை வரவிடுவான் ஏன், பின் வாங்கிக் கட்டுவான் ஏன் என்றும் ஜே.வி.பி. கேட்கிறது.

தனது நாட்டின் கள, யதார்த்த நிலைகளை நன்கு புரிந்த கட்சி ஜே.வி.பிதான். அதனால்தான் - அக்கட்சியால்தான் - தென்னிலங்கை மக்கள் மத்தியில் இலகுவாக இனவாதத்தை விதைத்து, குறுக்கு வழியில் தனது நாடாளுமன்றப் பலத்தை வளர்த்துக் கொள்ள முடிந்தது; முடிகின்றது.

அதேபோல, தனது நாட்டு அரச அதிகார பீடத்தின் ஒடுக்குமுறைப் போக்கை - சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறைகளை - நன்கு அக்கட்சி உணர்ந்து, நிதர்சனத்தைப் புரிந்து கொண்டிருப்பதால்தான், ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பொதுப் பிரதிநிதிகளை இலங்கைக்கு வர அனுமதித்து, இங்குள்ள பொட்டுக்கேடு அம்பலமாக இடமளிக்காதீர்கள் எனக் கூக்குரலிடுத் துடியாய்த்துடிக்கிறது.

'மடியில் கனமில்லையானால், வழியில் பயமில்லை' என்பார்கள். மோசமான மனித உரிமை மீறல்கள் உட்பட சிறுபான்மையினருக்கு எதிரான கொடூர ஒடுக்குமுறைகளில் தென்னிலங்கையும், அதன் அரசியல் கட்டமைப்பும், அரச அதிகாரமும் ஈடுபட்டிருக்கவில்லையானால் - அவற்றின் கை சுத்தமாக இருக்குமானால் - அவர்கள் சுத்தவாளிகள் என்றால் - ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் உண்மைகளைக் கண்டறிய இலங்கைத் தீவுக்குள் நுழைவது குறித்து, அரசோ, தென்னிலங்கைத் தரப்போ குழம்பத் தேவையில்லையே.

அத்தோடு, பல்வேறு நாடுகளிலும் பயங்கரவாதிகளாகப் பட்டியலிடப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்காகத் தர்மத்துக்கும், நியாயத்துக்கும், தார்மீகத்துக்கும் அப்பால் போய் நின்று குரல் எழுப்பிச் செயற்படவேண்டிய எந்தத் தேவையும் - அவசியமும் - ஐரோப்பிய ஒன்றியத்துக்கோ, சர்வதேச சமூகத்துக்கோ, ஐ.நாவுக்கோ கிடையாது.

ஆனால் அதேசமயம், தன்னை ஓர் இறைமையுள்ள - சட்ட ரீதியான அரசு என்று கூறிக்கொண்டு, மற்றொரு பூர்வீகத் தேசிய இனத்தின் - சிறுபான்மை மக்களின் - நியாயமான - நீதியான - அபிலாஷைகளை நசித்து, அடக்கி, ஒடுக்கி, அராஜகம் புரியும் பேரினவாத அரசு ஒன்றின் அட்டகாசங்களைப் பார்த்துக்கொண்டு சர்வதேச சமூகம், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை மட்டுமல்ல, தர்மம் - நியாயம் புரிந்த எத்தரப்பும் கூட வாயடங்கி, சகித்திருக்க மாட்டாது.

அந்த நியாயத்தை - நிதர்சனத்தை - புரியாமல் பிதற்றுகின்றது ஜே.வி.பி.

இலங்கைக்கு வரும் ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை, அவர்கள் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு உதவும் நோக்கிலேயே இங்கு வருகின்றார்கள் என்று குற்றம் சுமத்தும் ஜே.வி.பிக்கும், ஐ.நாவின் அவசர மனிதநேயப் பணிகளுக்கான ஐ.நாவின் உதவிச் செயலாளரான ஜோன் ஹோம்ஸை 'பயங்கரவாதி' எனச் சித்திரித்த அரசின் மூத்த அமைச்சரும் நாடாளுமன்றப் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயின் நிலைப்பாட்டுக்கும் இடையில் அதிக வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

அரங்கேறும் அரச பயங்கரவாதம் அகிலம் எங்கும் அம்பலமாவதைத் தடுப்பதற்காகவே, சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு இப்படி 'பயங்கரவாதிகளுடன் தொடர்பு' என்ற சாயம் பூசப்படுகின்றது.

*"எங்கள் ஆட்சேபனையையும் மீறி ஒரு தடவை அலன் றொக்கை இலங்கை அரசு வரவேற்றது. அவர் இங்கு வந்து, பின் உலகம் முழுவதும் சென்று, அரசுப் படைகள் சிறுவர்களையும் படைக்குச் சேர்க்கின்றன எனப் பிரசாரம் செய்தார். பின்னர் ஜோன் ஹோம்ஸ் வந்தார். தொண்டுப் பணியாளர்கள் பணி புரிவதற்கு உலகிலேயே மிக மோசமான இடம் இலங்கை என்று அவர் பிரசாரம் செய்தார். இலங்கையைத் துண்டாக்கும் தனது முயற்சிகளை சர்வதேச சமூகம் இன்னும் கைவிடவேயில்லை"* - என்று பொருமுகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ

அவருக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

''சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறைக் கொடூரமும், பேரினவாதப் பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நிலைமை தொடருமானால், சர்வதேசம் இப்படி ஒவ்வொரு உண்மையாக - வரிசையாக - விடயங்களை வெளிக்கொணர்ந்தே தீரும். அது மட்டுமல்ல. இக்கொடூரங்கள் தொடரும்போது - அடக்கப்படும் சிறுபான்மையினரான தமிழர்களின் பக்கத்து நியாயத்தை உணர்ந்து, இலங்கைத் தீவைத் துண்டாடித் தமிழர் தாயகத்தின் பிரிக்கவே முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே இவ்விவகாரத்தில் நியாயம் செய்வதற்கான ஒரே - மாற்ற முடியாத - மார்க்கம் என்ற நிலைக்கும் அது தள்ளப்படுவதும் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே, இந்நிலைமை ஏற்படக் கூடாது என ஜே.வி.பி. உண்மையில் கருதுமானால், தென்னிலங்கை புரியும் கொடூரத்தை மறைத்து, சர்வதேச சமூகத்தைத் திட்டுவதை விட்டு விட்டு, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அவர்களின் நீதி - நியாயமான - அபிலாஷைகளின் அடிப்படையில் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அது முன்வரவேண்டும். தவறின், சர்வதேச சமூகத்தின் மோசமான நெருக்குவாரத்தை ஜே.வி.பி. உள்ளிட்ட தென்னிலங்கை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# கோதுமை மா விலை கண்டபடி எகிறுவதை கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திருத்தம்

## பிறிமாவின் ஏகபோகத்தை தடுக்க அரசு திட்டம்

கொழும்பு,ஒக்.3

பிறிமா நிறுவனம், தான் நினைத்தவாறு கோதுமை மாவின் விலையைக் கூட்டமுடியாத படி அரசு சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

இத் திருத்தச் சட்ட மூலம் இன்று அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. வரவு - செலவுத் திட்டத்தின்பின் அதனை நாடாளுமன்றிற்குக் கொண்டுவந்து சட்டமாக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியவை வருமாறு:-

கோதுமை மாவின் விலையை பிறிமா நிறுவனம் அடிக்கடி அதிகரிப்பதன் காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போதைய சட்டத்தின்படி விலையை அதிகரிக்கும் ஏகபோக உரிமை பிறிமா நிறுவனத்திற்கு உண்டு. அந்நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தொடர்ந்தாலும் வெல்ல முடியாது.

அந்நிறுவனத்தின் ஏகபோக உரிமையைக் குறைப்பதாகவிருந்தால் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது அவசியம்.

இதற்கமைவாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நாம் தீர்மானித்துள்ளோம். இத்திருத்தச் சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு, வரவு - செலவுத் திட்டத்தின்பின் நாடாளுமன்றிற்கும் கொண்டுவந்து சட்டமாக்கப்படும்.

பிறிமாதவிர ஏனைய நிறுவனங்களும் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

இது தொடர்பாக நான் அண்மையில் டுபாய்க்குச் சென்று அங்குள்ள பல நிறுவனங்களுடன் பேச்சு நடத்தியுள்ளேன். இந்த முயற்சி வெற்றியளித்தால் கோதுமை மாவின் விலை வெகுவாகக் குறையும்- என்றார். (சி)

# ஐஸ்லாந்து நாட்டின் பிரதிநிதி தமிழ்ச்செல்வனுடன் பேச்சு



கிளிநொச்சி, ஒக். 03

ஐஸ்லாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதி பிஜானி வெஸ்ட்மன் நேற்று கிளிநொச்சிக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர் என்று புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடைகள், மக்கள் குடியிருப்புகள் மீதான வான் தாக்குதல்கள், யாழ்ப்பாணம் உட்பட தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் கைதுகள், காணாமற்போதல் என்பன தொடர்பாக ஐஸ்லாந்துப் பிரதிநிதிக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் விளக்கமளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# சுமாத்திராவில் நேற்றும் ஆழிப்பேரலை அபாயம்

ஜகார்த்தா, ஓக். 3

இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவில் நேற்றும் பாரியளவிலான நில நடுக்கம் உணரப்பட்டது. இதனையடுத்து அங்கு ஆழிப்பேரலை அபாயம் தொடர்பாக பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றுப்பிற்பகல் வேளை திடீரென உணரப்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.2 ஆக பதிவானது. பாதுகாப்பற்ற இடங்களிலிருந்து வெளியேறுமாறு மக்களுக்கு அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்தனர். எனினும் இந்த நில நடுக்கத்தினால் இலங்கைக்கோ அதனை அண்டிய நாடுகளுக்கோ ஆபத்து ஏதும் இல்லை என இலங்கையின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்தது.

# கோண்டாவிலில் ஒருவர் கடத்தப்பட்டார்; சங்கத்தானையில் ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 3

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த முத்துலிங்கம் ஜெயகாந்தன் (வயது 31) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார்.

நேற்று, செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு மேற்படி இளைஞனின் வீட்டுக்குச் சென்ற துப்பாக்கிதாரிகள் அவரைக் கடத்திச் சென்றதாக அவரது பெற்றோர் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

*காணவில்லை என முறைப்பாடு*

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆபர் சகாயம் சுகன் (வயது 22) என்பவரை நேற்று முன்தினம், முதலாம் திகதி முதல் காணவில்லை என்று அவரது தந்தை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

சங்கத்தானையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் புறப்பட்டவர் நேற்று வரை வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து கைதடியைச் சேர்ந்த இருபது வயதுடைய கூலித் தொழிலாளி ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளார்.

அவரைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-1-50)

# தமிழ் ஆசிரிய மரபின் விருட்சமாக விளங்கிய சைவநெறிக் காவலன்

## பண்டிதர் பஞ்சாட்சரத்துக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 3

தமிழ் ஆசிரியத்துவ மரபின் விருட்சமாகவும் சைவ நெறிக் காவலனாகவும், பண்டிதர் பாரம்பரியத்தின் பாதுகாவலனாகவும் முதுபெரும் அறிஞனராவும் விளங்கிய ஆசிரியமணி அ. பஞ்சாட்சரத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

இவ்வாறு ஆசிரியமணி அ. பஞ்சாட்சரத்தின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் சைவத் தொண்டர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முதுபெரும் அறிஞனாக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த இப்பெருந்தகையின் பிரிவு சைவத் தமிழ் உலகுக்கு பேரிழப்பாகும். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பிரதம சீடனாக விளங்கி தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. பண்டிதமணியின் நூல்கள் பல வெளிவருவதற்கு இவர் ஆற்றிய பதிப்பித்தல் பணி மெச்சத்தக்கது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம், சைவ பரிபாலன சபை போன்றவற்றில் மூத்த உறுப்பினராக விளங்கி சமய நெறி காத்த சீலர் இவர். நாவலர் பெருமானின் சொத்துக்களை பராமரிப்பதற்கு உருவாக்கப்பட்ட நாவலர் சபையை நல்ல முறையில் காத்த பெருந்தகை. ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய சங்க தொழிற்சங்க வாதியாக விளங்கிய இவர் எம் மண்ணின் கல்விக்கு மகத்தான சேவை செய்துள்ளார்.

இளைய தலைமுறைக்கு உகந்த வழிகாட்டியாகவும் வரலாறுகள் தெரிந்த நடமாடும் கல்விக் களஞ்சியமாகவும் விளங்கிய இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். (அ)

# பருத்தித்துறைப் பிரதேசத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடத்தி கொள்ளையிடும் செயற்பாடுகள் இப்போதைய கள நிலவரமாக இருக்கின்றன.

பகல் வேளை தவிர்ந்த இரவு ஊரடங்கு நடைமுறையில் உள்ள நேரத்தில் மக்கள் நடமாட முடியாத சூழலைச்சாதகமாகப் பயன்படுத்தி கொள்ளைகள் நடத்தப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த ஆறு மாத காலமாக பருத்தித்துறை நீதி நிர்வாகப்பகுதியில் மக்களின்நிம்மதியான வாழ்வு குழம்பிப்போயுள்ளது. மக்களின் உடைமைகள், சொத்துக்கள் பயங்கரமான முறைகளில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வாழ்க்கைக்கு இடையூறு தனிப்பட்ட ஒரு சிலரின் விருப்பு வெறுப்பு, சுயஇன்பம் ஆகியவற்றுக்காக பொதுமக்கள் நலன் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. பொதுமக்களின் வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கப்படுவதை நீதிமன்றம் அனுமதிக்காது. தற்போது நடக்கும் பயங்கர கொள்ளைகளைத் தடுத்து, மக்கள் அமைதியாக, நிம்மதியாக வாழ நீதிமன்றம் உதவுமே தவிர, தனிப்பட்டவர்களின் நலன்களைப் பாதுகாக்க நீதிமன்றம் உதவி புரிய மாட்டாது. மக்களின் நலன்களிலேயே கூடுதலான அக்கறை காட்டப்படும்.

குறிப்பிட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட நபர் தொடர்பான பொலீஸாரின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சான்றுப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிவடைந்த பின் கள நிலைமையை கருத்தில் கொண்டு நீதிமன்றம் செயற்படும்.

மக்களின் பாதுகாப்பு, உயிர் உத்தரவாதம், சொத்து உத்தரவாதம் ஆகியவற்றுக்கு நீதிமன்றமே பொறுப்பாகும். இந்த விடயத்தில் நீதிமன்றத்தில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பேணுவதில் அது உறுதியாக இருக்கின்றது- என்றார் அவர். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 17 | வியாழக்கிழமை 04.10.2007 |
| திதி : அட்டமி | முற்பகல் 08.41 |
| நட்சத்திரம் : | புனர்பூசம் பின்னிரவு 04.22 |
| சுபநேரம் | : 07.32 - 09.02 |
| ராகுகாலம் | : 01.32 - 03.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சநீதிமன்ற அவமதிப்பு விவகாரம்

# தமிழக அரசிற்கு எதிராக நடவடிக்கை இல்லையாம்

### மத்திய அரசு அறிவிப்பு



தாஸ் முன்ஷி

புதுடில்லி,ஒக்.03

உச்சநீதிமன்ற உத்தரவு எதனையும் தமிழக அரசு மீறவில்லை என அறிவித்திருக்கும் இந்திய மத்திய அரசு, அந்த அரசுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என குறிப்பிட்டிருக்கின்றது.

''உச்சநீதிமன்ற உத்தரவைத் தமிழக அரசு மீறவில்லை. அதனால், அந்த அரசுக்கு எதிராக எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கமாட்டோம்'' - என மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் தாஸ் முன்ஷி குறிப்பிட்டார்.

சேதுசமுத்திரத்திட்டத்தை விரைவுபடுத்தக்கோரி முழு அளவிலான கடையடைப்புக்கு தமிழகத்தை ஆளும் தி.மு.க. கூட்டணி அழைப்பு விடுத்தமைக்குத் தடைவிதித்தது இந்திய உச்ச நீதிமன்றம்.

இந்தத் தடையையும் மீறி, தமிழகமெங்கும் கடையடைப்பு நடத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின்பேரில் தமிழக அரசை ஏன் கலைக்கக்கூடாது என உச்சநீதிமன்றம் விசனத்துடன் கேள்வியெழுப்பியது என்பது தெரிந்ததே.

இந்நிலையில்தான் உச்சநீதிமன்றின் விசனம் குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் தாஸ் முன்ஷியிடம் வினவியபோது -

''தமிழகத்தில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் உண்ணாவிரதம் இருப்பது பற்றிய விவகாரத்தில் உச்சநீதிமன்றம் தெரிவித்த கண்டனம் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. காந்தியின் கொள்கைப்படி, தமிழக முதல்வரும் மாநிலத்தின் பிற தலைவர்களும் அகிம்சை வழியில்தான் உண்ணாவிரதம் இருந்தனர்.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவு எதையும் தமிழக அரசு மீறவில்லை. அதற்கு அரசைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியை அமுலாக்கும் பேச்சுக்கே இடமில்லை. தமிழக அரசுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியமில்லை. தி.மு.க. எங்கள் அரசின் ஓர் அங்கம். மாநில அரசுக்குத் தொல்லை தரும் வகையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எதையும் நாம் செய்ய மாட்டோம்.

முதல்வர் கருணாநிதி, தி.மு.கவில் மட்டுமின்றி நாட்டின் பலம்மிக்க தலைவர்களில் ஒருவர். அவர் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கியது, நீதிமன்ற உத்தரவை மீறியது ஆகாது. காந்தியின் கொள்கையை ஏற்று, அவரது பிறந்த தினத்துக்கு முந்திய நாளில் தனது உணர்வை அறவழியில் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் - என்றார்.

(முன்னர் வந்த செய்தி 07ஆம் பக்கத்தில்)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளையிலேயே கடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருமலைப் பொலிஸார், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மற்றும் மக்கள் கண்காணிப்புக்குழு ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

## கடத்தப்பட்டோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அடுத்த வாரம் மேன்பிரட்நொவக், சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை அமைப்புகள் மேற்கொண்டுவரும் நிலையில், மஹிந்த அரசு இத்தகைய முட்டுக்கட்டைகளைப் போட முனைந்து வருவதாக மனித உரிமைகள் அமைப்பினர் தெரிவித்தனர். (சி)

## அல்லைப்பிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தங்கியிருந்து வழக்கில் பிரசன்னமாக தனக்கு பாதுகாப்பு இல்லை என்று அவர் கூறுகின்றார். இங்கு வருவதற்கு பின்னடிக்கிறார் என்றும் சட்டத்தரணி தெரிவித்தார்.

குற்றம் செய்தவர்களை சட்டத்துக்கு முன் நிறுத்த வேண்டும். உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் எனத் தெரிவித்த நீதிவான், சாட்சி நீதிமன்றில் ஆஜராக இருவார அவகாசம் வழங்கியுள்ளர்.

பிரஸ்தாப சாட்சிக்கு நீதிமன்றம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியுள்ளதால், படையினரால் ஆபத்து இல்லை என நீதிவான் சுட்டிக்காட்டினார்.

வழக்கு விசாரணை எதிர்வரும்16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடற்படையினரின் நலன்களைக் கவனிக்க சட்டத்தரணி ஆனந்த வீரசிங்க ஆஜராகி இருந்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவுகொழும்பு தலைமையக உதவிப் பெலீஸ் அத்தியட்சகர் எஸ்.மொகமட், யாழ். பொலீஸ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஜனக சமிந்த ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். (அ-1)

## ஈழத்தமிழர் படகுகள் இலங்கையில் எரிப்பு!

ஈழத்தமிழர்களின் மீன்பிடிப் படகுகள் இனந்தெரியாதோரால் எரிக்கப்படுகின்றன என இலங்கையிலிருந்து தப்பித் தமிழகம் வந்தடைந்திருக்கும் ஈழத்தமிழ் அகதிகள் தெரிவிக்கின்றனர்.

மன்னார், பேசாலை கடற்பரப்பிலிருந்து படகில் புறப்பட்ட 10 ஈழத்தமிழ் அகதிகள் தமிழக வேதாளைக் கடற்பரப்பை நேற்றுமுன்தினம் வந்தடைந்தனர். பொலிஸாரின் தீவிர விசாரணைக்குப் பின்னர் அவர்கள் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். இந்நிலையில், தமிழக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அகதிகள் - ''இலங்கையில் போர்ச்சூழல் நிலவுகின்றது. பதற்றம் தொடர்கின்றது. மோதல்கள் வலுக்கின்றன.

எமது மன்னார், முள்ளிக்குளம் பகுதியில் பலரது மீன்பிடிப் படகுகள் எரிக்கப்பட்டன. படகுகளையும் இனந்தெரியாதோர் எரித்துவிட்டனர். உயிருக்கு அஞ்சியே தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளோம்'' என்றனர் ஏக குரலில்.

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மிடம் உள்ளன என்றும், அது தொடர்பான சில தகவல்களை மங்கள சமரவீர இவ்வூடகவியலாளர் சந்திப்பில் தெரிவிப்பார் என்றும் மங்களவின் வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை செய்யப்போகும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்கவென மங்கள தகவல்களைத் திரட்டிவைத்துள்ளார் என்றும், அத்தகவல்கள் மூலம் பல உண்மைகள் வெளிவரும் என்றும் மங்களவின் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இச்சந்திப்பில் கலந்துகொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சமஷ்டி ஊடாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகியுள்ளது என்று கூறப்படுகின்றமை தொடர்பில் சில விளக்கங்களை முன்வைப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் நேற்றுக் கூறின.(சி)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


அங்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரச உயர் மட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு வகை செய்யும் சட்ட மூலமே இப்போது தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நகல் சட்டமூலத்தை அவசரமான ஒன்றாகக் கருதி, உயர் நீதிமன்றத்தின் முன்வைத்து, அதன் பின்னர் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் 17 சபைகளுக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 3 சபைகளுக்கும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 5 சபைகளுக்கும் புதிதாக வேட்பு மனுக்கள் கோரப்படும். (சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 ✱ 09 ✱ 1925



விண்ணில் 14 ✱ 10 ✱ 2006

அமரர் திருமதி **தங்கம்மா ஸ்ரீபன்**

திதி: (அட்டமி) 03. 10. 2007

*ஆண்டொன்று சென்றதம்மா*
*ஆறவில்லை எம்துயரம்*
*அவனியில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே*
*ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன!*
*அவைகள் அனைத்தும் உன் அன்புக்கு ஈடாகுமா?*
*ஆண்டு ஒன்றென்ன பல சென்றாலும்*
*எங்கள் விழிகளில் என்றும்*
*மறையாது உங்கள் முகம்*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனை வேண்டுகிறோம்**

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**70/6, பாண்டியன்தாழ்வு**
**யாழ்ப்பாணம்.** (66393/ சி)

## மரண அறிவித்தல்

### *வீரவாகு நாகலிங்கம்*

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு நாகலிங்கம் நேற்று (02.10.2007) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் சாவித்திரிதேவி, விமலாதேவி, இந்திராதேவி, சறோஜினிதேவி, மல்லிகாதேவி, கெங்காதேவி, நடராஜசுந்தரம், குமாரதாஸ் (ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மார்க்கண்டு, கனகரட்ணம், ரத்தினம், ரவீந்திரநாதன், தங்க வேலு (ப.நோ.கூ. சங்கம், சாவகச்சேரி), சிவநாதன், மனோராணி, பரஞ்சோதி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2007) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நா. நடராஜசுந்தரம் (மகன்).**


## தொழிற் பயிற்சிகள்

**MOBILE PHONE REPAIRING**

| | |
|---|---|
| Hardware | Hardware Repairing |
| Software | Software |
| Phone lock | Troble shooting |

**RADIO, TV AND VIDEO DECK REPAIRING**

| | | |
|---|---|---|
| Amplifier | CD player | Satellite Antenna |
| Radio | videodeck | monitor |
| TV | UPS | video deck |

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING**

| | |
|---|---|
| Assemple of upgrade own computer | |
| Trouble shoot & Repair | Net working of computer |

**REFRIGERTION AND AIRCONDITIONING**

| | | |
|---|---|---|
| Retrigrator | spilt Ac | Package Ac |
| Deep freezer | window Ac | |

**ELECTRICAL WIRING AND REWINDING**

| | |
|---|---|
| Single phase wiring | Fan, motor, Transformer |
| Three Phase wiring | Rewinding |

பயிற்சிகள் ஆரம்பம்: 06.10.2007 (கிழமை நாள்கள்)
08.10.2007 (சனி, ஞாயிறு)

விவரங்களிற்கு

**Jaffna Technical Institute**
*45 Clock tower Road, Jaffna*
*T.P 021 222 6434*

கிளை
Dr. *சிறிபத்மநாதன் கட்டிடம்*
*சிலையடி, புலோலி*



## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30/09/2006 வரை அடகு வைத்து 30.09.2007 வரைக்கும் மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலவிற்பனைத் திகதி 20/10/2007 சனிக்கிழமை காலை 8.30 மணி.

| **கிளையின் பெயர்** | **ஏலவிற்பனை நடைபெறும் இடம்.** |
|---|---|
| யாழ்ப்பாணம், | யாழ்ப்பாணம் கிளை |
| சுன்னாகம், | இல.496, ஆஸ்பத்திரி வீதி, |
| மானிப்பாய், | யாழ்ப்பணம். |
| திருநெல்வேலி. | தொலைபேசி இல. 021-222-2696 |

*ஏலவிற்பனையை இரத்துச் செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமையை வங்கிகொண்டுள்ளது.*

உதவி பொதுமுகாமையாளர் (கடன்)
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,கொழும்பு - 3.

NSB

(சி-53883/சி)






## NEW SCIENCE HALL JAFFNA

2008 & 2009 A/L
**ELECTRICITY**

By **குமரன்** B.Sc(Ceylon), M.Sc(Spain)
சனி, ஞாயிறு 8.30
குறிப்பு:- வெளிமாணவர்களுக்கும் இப்பிரிவில் அனுமதி வழங்கப்படும்.
ஆரம்பம்:- 06.10.2007 Sat 3.30


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361½ம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org